கவிச்சித்தரின்

# சிலுவைகள்

இளம்பிறை வெளியீடு...




க.பொ.இளம்வழுதி



''வேர்கள்'' நூலுக்குப் புதுவை அரசின் பரிசை
கல்வி அமைச்சர் திரு. **சோசப் மரியதாசு**
நூலாசிரியருக்கு வழங்குகிறார்.

## க. பொ. இளம்வழுதியின்

### <u>படைப்பு வரிசை</u>

| | | |
|---|---|---|
| 1. | சிவப்பு நிலா (காப்பியம்) | தமிழக அரசின் பரிசு பெற்றது. |
| 2. | குறுநூறு | குறும்பாடல்கள். |
| 3. | சிவப்புச் சிந்தனைகள் (கவிதைகள்) | தமிழக அரசின் பரிசு பெற்றது. |
| 4. | வண்ணத்தமிழ் | சந்தப் பாடல்கள். |
| 5. | வேர்கள் (கவிதைகள்) | புதுவை அரசின் பரிசு பெற்றது. |
| 6. | ஆண்டவன் அறுபது | கவிதைகள் |
| 7. | நிறங்கள் | வரலாற்றுச் செய்திக் கவிதைகள். |
| 8. | வெற்றியின் அறிமுகம் | சவகர்லால் நேருவின் வரலாறு. |
| 9. | இலக்கை நோக்கி | நெல்சன் மண்டேலாவின் வரலாறு. |

கவிச்சித்தரின்

# சில்லுகள்

க. பொ. இளம்வழுதி

இளம்பரிதி வெளியீட்டகம்
38, அண்ணா நகர்,
கடலூர் - 607 001.

# நூலாக்கக் குறிப்பு

உரிமை : *ஆசிரியருக்கு*

விற்பனை உரிமை : **முத்துப் பதிப்பகம்,**
வில்லியம் மனைப் பிரிவு,
கன்னியாகுளம் சாலை,
விழுப்புரம் - 605 602.

விலை : உருபா. **ஆறு**

- கவிச்சித்தரின் ***சில்லுகள்*** (கவிதைகள்)
- ஆசிரியர் : கவிச்சித்தர் **க. பொ. இளம்வழுதி**
- முதற் பதிப்பு : மார்ச் *1992*
- அச்சுத்தாள் : 11.6 கி.கி.
- பக்கம் : viii + 40 = 48
- அச்சிட்டோர் : ***சோழா அச்சகம்***, கடலூர்-607 001.



பெ ஆனந்ததுரை, இல. கலியவரதன், வெ. தருமலிங்கம், ஆ. கோ. சிங்காரவேலு

# மனதில் பட்டதும், தொட்டதும்


**பெ. ஆனந்ததுரை,** பி.ஏ ,
100, தங்கராஜ் நகர்,
கடலூர்-2.


சில்லுகள் என்னும் இந்த முத்து மாலையின் பெரு அணியாக ஒளிர்வது "உயரமானது" என்னும் தாயைப் பற்றிய விளக்கமாகும்.

மலையருவியை கூந்தலாகவும், நூற்பாவாகவும் உருவகப் படுத்தியுள்ளது சிறப்பாக உள்ளது.

துஞ்சவிடாத துயரத்தை, திரும்பாத ஊர்ப்பயணமான 'மரணத்தை', புரட்சியை வெடிக்கச்செய்யும் 'வயிறை', கைப்பூட்டாக மாறிவிடக்கூடிய 'கையூட்டை' எல்லாம் எழுத்தோவியமாக்கி உள்ளார்.

கவிச்சித்தர் இந்நூலில் நாம் தினமும் பயன்படுத்தும் வார்த்தைகளை இலக்கிய ரசனையோடு படிப்பதற்கு இங்கே அள்ளித்தந்திருக்கின்றார்கள்.

—*பெ. ஆனந்ததுரை*

இல. கலியவரதன், பி.ஏ.,
செயலாளர்
தென்னார்க்காடு மாவட்ட
ஊராட்சி உதவியாளர்கள் சங்கம்.

இந்நூல் எளியவர்களும், இலக்கிய ஆர்வம் இல்லாதவர்களும் படிக்க வேண்டுமென்பதற்காக எழுதப்பட்டதாகவே நான் உணர்கின்றேன்.

வெடிகுண்டை ''பழி வழி காட்டி'' என்று குறிப்பிடும் திறன் பாராட்டுக்குரியது. ''குக்கல்'' என்ற கவிதை விடுகதை அமைப்பில் உள்ளது.

பொதுவியல் என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள கவிதைகளில் மனிதனுடைய பலம் எதிலே, பலவீனம் எதிலே என்று எளிதில் கண்டுகொள்ளும் கருத்துக்கள் உள்ளன. ''அகவிழி'' என்னும் கவிதை அருமையாக உள்ளது.

''அன்னையின் உளமே அனைத்திலும் உயரம், என்ற பாடலே சில்லுக்குச் சிகரமாய் அமைந்து நூலை முழுமைபெறச் செய்கிறது.

பண்ணுருட்டி
27-2-1992

—இல. கலியவரதன்

**வெ. தருமலிங்கம்,**
புதுப்பாளையம்,
பண்ணுருட்டி வட்டம்.

கவிச்சித்தர் திரு. க. பொ. இளம்வழுதி ஐயா அவர்களின் 101 பாக்களைக் கொண்ட ''சில்லுகள்'' என்னும் நூலைப் படித்து மகிழ்ந்தேன்.

சில்லுகளின் சிறப்பு - கருத்தாழம், எளிய சொற்கள் எவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் உள்ளது நூல்.

முத்தான கருத்தைத் தரும் சத்தான நூலாக இருப்பதால் இதனை சின்ன குறள் என்றே போற்றுகின்றேன்.

நூலில் என்னைக் கவர்ந்தது அரசியல் பகுதி

''பயன் கருதாமல்
பதவி பெறாமல்
இயன்றதை எளியோர்க்(கு)
இயற்றுதல் தொண்டாம்'' என்றும்,

அரசியல் கீழ்மையை

''நரிமதி, நாவளம்
நடிப்புக் கீழறுப்பு
உரிமையாய் கொண்டால்
உயர்த்தும் அரசியல்'' என்றும் கூறும்

பாங்கே அலாதி.

தீண்டாமைதான் தீமையில் மூத்தது, எனும் சாதாரண வார்த்தையில் எவ்வளவு பொருள் பொதிந்துள்ளது !

தகுதியான கருத்தைத் தரும் ஆசிரியரும், நூலும் தெரியாத தமிழ் இல்லங்கள் இல்லை என

வளர்க ! வாழ்க !!

— **வெ. தருமலிங்கம்**

*ஆ. கோ. சிங்காரவேலு,*
ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்,
பத்திரக்கோட்டை & அஞ்சல்,
பண்ணுருட்டி வட்டம்.

கவிதை என்னும் சொல்லைக் கேள்விப்படும்போதெல்லாம். நமக்கேன் இந்த வம்பு என்று ஒதுங்கிக்கொண்டிருந்தேன். ''சில்லுகள்'' நூலைப் படித்ததும் மனசுக்குள் பயம் சுத்தமாகப் போய்விட்டது. இவ்வளவோ நாள் நாம் தான் புரியாத பயத்தால் தவறு செய்து விட்டோமோ என்று மனசுக்குள் ஒரு நெருடல்.

எனக்கு எப்படி கவிச்சித்தரைப் பிடித்ததோ, அப்படியே இம்மியும் குறையாமல் அவருடைய கவிதையும் பிடித்துவிட்டது

எல்லா கவிதைகளுமே எனக்குப் புரிந்துவிட்டதாகப் பொய் சொல்லமாட்டேன்.

இவருடைய கற்பனை கொஞ்சம் விஸ்தாரமானதுதான். இல்லையென்றால் மலையருவியை விழுது, கூந்தல் புது நூற்பாவு என்று அடுக்கிக்கொண்டே போவாரா?

— *ஆ. கோ. சிங்காரவேலு*



# எண்ணச் சுவடுகள்

இந்த நூல் எளியவர்களுக்காகவே எழுதப்பட்டது. சாதாரணர்களின் கையே இதற்குச் சங்கப் பலகை! அதனால்தான் பத்திரக்கோட்டை ஊராட்சித் தலைவர் திரு. ஆ. கோ. சிங்காரவேல் புதுப்பாளையம் விவசாயி திரு. வெ. தருமலிங்கம். கடலூர் ஆட்டோ உரிமையாளர் திரு. பெ. ஆனந்ததுரை, பி.ஏ., ஊராட்சி உதவி-யாளர்கள் சங்கச் செயலர் திரு. இல. கலியவரதன், பி.ஏ., ஆகியோரின் கருத்துக்கள் நூலுக்கு அணியாகியுள்ளன.

எனது இலக்கியப் பயணத்தில் கவிதைக் காவலர் திரு. தெசிணி, கவிஞர்கள் செ. பார்த்தசாரதி, கல்லாடன், சு. வேல்முருகன். இலக்கியன், புலவர்கள் திரு வ. கலியபெருமாள் திரு. கி. அரியரன் மற்றும் நண்பர்கள் மா. சுதர்சனம், டாக்டர் ந. கார்த்திகேயன், மு.பாண்டுரங்கன், மு.தனராஜ், பொன் நடராசன் ஆகியோரின் துணையும் தூண்டுதலும் மறக்க முடியாதவை.

எனது நூல்களை வெளியிட்டு வரும் விழுப்புரம் முத்துப் பதிப்பக உரிமையாளர் திரு. மு.இலட்சுமணன் என் நன்றிக்குரியவர்

எனது முதல் நூலான சிவப்பு நிலாவை வெளியிட்டு, பதிப்புப் பயணத்தைத் துவக்கி வைத்தவர் சென்னை பூங்கா நகர்த் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் இலக்கியப் புரவலர் திரு. உ. பலராமன். அவருக்கு இந்நூல் எனது நன்றி காணிக்கை!

நூலை செப்பமாக உருவாக்கிக் கொடுத்த சோழா அச்சக உரிமையாளர் திரு. இரா. சு. மனோகரனுக்கும், தொழிலாளர் தோழர்களுக்கும், முகப்புப் படத்தை வரைந்தளித்த ஓவியர். திரு. இரமேசு, பி.ஏ., அவர்களுக்கும் நன்றி.

கடலூர்
1-3-92

—க. பொ. இளம்வழுதி

இலக்கியப் புரவலர் திரு. உ. **பலராமன்**

சட்டப்பேரவை உறுப்பினர், பூங்கா நகர்த் தொகுதி, சென்னை.



" ஒருநன்றி செய்தாரை யுள்ளத்தே வைத்துப்
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர் "




## 1. காலை

இருளின் மரணம் !
இளங்கதிர்ப் பயணம் !
பொருளறி ஒளிவரும்
பூபாள வேளை !

## 2. ஆழி

ஓயா தழுவதேன்
உலகில் முக்கால்நீ ?
தேயா ஆசையின்
தேட்டம் துயரே !

## 3. வானவில்

மண்மகள் ஒற்றை
மார்பின் கச்சு !
விண்குகை வாயில்
வண்ணத் திருவில் !

## 4. மழை

கனைக்கும் முகிலின்
கண்ணீர்த் துளிகாள் !
நினைக்கும் ஆற்றல்
நீர்த்து போனதோ ?

## 5. இடி

மேக மதகரி
மின்னியல் மோதலின்
சோக ஓலமே !
சுடரிழை அறுந்ததோ ?

சுடரிழை : மின்னலிழை

## 6. காடு

விலங்கின் வீடு
விண்மரக் காடு !
துலங்கும் மழையைத்
தூண்டும் தூது !

## 7. தென்றல்

கொடிமலர் தழுவிக்
குளிரக மேந்தி
மடிதவழ் குழவிபோல்
மருவிடும் தென்றல் !

## 8. மலையருவி

முதுமலைக் கூந்தல் !
முருகுநீர் விழுது !
புதுநூற் பாவு !
பூங்சரம் அருவி !

## 9. எரிமலை

மண்ணுடல் புற்றுநோய் !
மலையழல் வயிறு !
எண்ணம் கெடுத்த
பெண்மனம் எரிமலை !

## 10. பாலை

மழைமுகிற் பகைத்த
மணற்குவைப் பரவை !
உழையா செல்வராய்
உள்ளதே பாலை !




## 11. அழகு

மலரில், மலையில்
மழலைச் சிரிப்பில்,
நிலவில், கதிரில்
நிலைத்தது அழகு !

## 12. ஆசை

இல்லார் காணும்
இன்பக் கனவு !
எல்லார் மனதிலும்
இருக்கும் புதையல் !

## *13.* பக்தி

பற்றின் முதிர்ச்சி
பயன்மே லாசை !
தெற்றிய நெஞ்சம் !
தேடும் அமைதி !

## *14.* அடக்கம்

சொல், செயல் நேர்த்தி
சுடரிலா வெளிச்சம் !
வெல்லும் ஆற்றல்
வேராம் அடக்கம் !

## *15.* காமம்

ஆமைபோ லிருக்கும்,
அனலாய்த் தகிக்கும்,
காமம் விழித்தால்
களமது படைக்கும் !

## 16. துயர்

நெஞ்சக் கனலில்
பஞ்சாய் எரிந்து,
துஞ்ச விடாது
துளைப்பதே துயராம்!

## 17. முத்தம்

அன்பு உந்தலின்
அதர சந்திப்பு!
மன்மதக் கோட்டையின்
முதற்கடைத் திறப்பு!

## 18. சினம்

நரம்புகள் புடைக்கும்,
நல்லதை மறக்கும்,
இரங்கும் மனதையும்
இடிப்பது சினமே!

## 19. பேராசை

அருகதை இலாதொன்
றடைந்திட முற்படும்
மருவுடை மனத்துளிர்
மாசுபே ராசையாம் !

## 20. உவகை

உழைப்பின் வெற்றியில்,
உதவிடும் பெற்றியில்,
தழைக்கும் புகழில்
தளிர்விடும் உவகை !

## 21. பொறாமை

தனக்கே எனும்மனம்
தகிக்கும் கொள்ளி !
கனக்கும் பொறாமை
களர்மனக் கள்ளி !

## 22. கண்ணீர்

கன்னச் சமவெளிக்
காவிரி பாய்ச்சல் !
இன்னல் அறிமுகம்
கண்ணீர்த் துறைமுகம் !

## 23. மரணம்

விரும்பாமல் வருமழைப்பு
வெல்லமுடி யாதவிப்பு !
திரும்பாத ஊர்ப்பயணம்
தெளிந்தாரும் அழும்மரணம் !




## 24. மூளை

கட்டளை வழங்கும்
கட்டுப் பாட்டறை !
எட்டுசாண் உடலின்
இயக்ககம் மூளை !

## 25. நாளங்கள்

குருதியைக் கடத்தும்
குழல்வாய்க் கால்கள் !
பெருகும் சக்தியைப்
பேணுநா ளங்கள் !

## 26. காது

கன்னக் கரையில்
காணும் கிளிஞ்சல் !
பொன்னணி தாங்கி !
புலனொலி வாங்கி !

## 27 பற்கள்

முத்துக் கோர்வை
முறுவல் அறிமுகம் !
தத்துவ முதுமையில்
தங்கிடா பற்கள் !

## 28. வயிறு

பசியெனும் நெருப்பைப்
பதுக்கிய உலைக்களம் !
புசித்திட இலையெனில்
புரட்சியாய் வெடிக்கும் !

## 29. கண்ணிமை

மடித்த வெற்றிலை !
மணிவிழிக் கபாடம் !
துடிக்கும் இமைகள்
தோணி,மா ஓடு !




## 30. கல்வி

அங்காடிப் பொருளாய்
ஆனது கல்வி!
இங்கினி அறிவொளி
இயக்க விழாதான்!

## 31. மொழி

தன்னுணர் வூட்டும்,
தகுநெறி காட்டும்,
மன்னிய புலமை
மதிநலங் கூட்டும்!

## 32. கவிதை

எண்ண வார்ப்பு !
இதய ஈர்ப்பு !
வண்ணக் கோலம் !
வலியது கவிதை !

## 33. நல்லாசான்

புரையிலாப் புலமை !
புகட்டலில் இனிமை !
நிரைவழு வின்மை
நேர்மைநல் லாசான் !

## 34. உழைப்பு

எட்டுருக் காட்டும்
எறும்பென உழைத்தால்
மட்டிலா வளங்கள்
மறித்துகை கொடுக்கும் !

## 35. மதுப்பழக்கம்

மதிகெடல், மாண்பழிதல்,
மனை, மக்கள் சிறுமையுறல்,
விதியல்ல, மதுப்பழக்க
விளைச்சலிவை, விலக்கிடுக !

## 36. கையூட்டு

கோயில் தொட்டு
கோட்டை வரையில்
வாயில் தோரணம்
வளர்கை யூட்டே !

## 37. பாமரன்

செய்வினை விளைவைச்
சிந்திக் காமலே
பொய்வழி நம்பிப்
போவான் பாமரன் !

## 38. அடிமை

பிச்சைப் பண்பும்
பெரும்பழி வினையும்
இச்சித் தேற்கும்
இயல்பினர் அடிமைகள் !

## 39. தீண்டாமை

ஆண்டவன் பெயரால்
ஆரியம் நுழைத்தது !
தீண்டா மைதான்
தீமையில் மூத்தது !

## 40. மக்கட்பெருக்கம்

பாமரத் தனத்தின்
பலபயிர் அறுவடை !
காமம் ஏவிவிடும்
கவலையின் உறுபடை !

## 41. கலகம்

ஆறறி வாளர்
அ∴றிணை யானால்,
காரணம் தேடியும்
கலகம் விளையும்.

## 42. போர்

புல்லறி வாளரே
பொறுப்பி லிருந்தால்
வல்லடி வழக்கு
வரும்பகை போரே !




## 43. நாடு

உடைமை, உரிமை,
ஒப்பிய ஆளுமை,
தடையிலா நீதி
தருவதே நாடு !

## 44. தொண்டு

பயன்கரு தாமல்
பதவிபெ றாமல்
இயன்றதை எளியோர்க்
கியற்றுதல் தொண்டாம் !

## 45. அரசியலாயுதம்

குறைகூறல்; கூச்சலிடல்;
குறுக்குச்சா லோட்டுவது;
அறைகூவல்; ஆர்ப்பாட்டம்
அரசியல்பேச் சாயுதமாம் !

## 46. பதவி

மழைமனம் மாற்றிடும்;
மமதையை ஊட்டிடும்;
பழையதை மறந்திடும்
பதவியின் பண்பிதே !

## 47. பணம்

படிப்பு, பதவி
பைந்தொடி கைத்தளம்;
கொடிநிழல் குளிர்சுகம்
கொடுப்பது பணமே !

## 48. அதிகாரம்

உழைப்பின் களைப்பை
ஓட்டி, வசதியை
அழைத்து வருவது
அரசதி காரமே !

## 49. வன்முறை

காவல், நீதி;
கட்சி; கடவுள்,
ஏவல். பிழைகளின்
இழிவே வன்முறை !

## 50. அரசியல் தகுதி

நரிமதி, நாவளம்
நடிப்புக்கீ ழறுப்பு !
உரிமையாய்க் கொண்டால்
உயர்த்தும் அரசியல் !




## 51. மரம்

நின்றால் நிழலும்
நிலைத்தால் கனியும்
கொன்றால் தூலமும்
கொடுப்பதே மரம். நீ!

## 52. மலர்கள்

தாவரப் பெண்மையின்
தத்துவ முத்திரை!
காவளர் மலர்களில்
கவிதையின் நித்திரை!

## 53. தாமரை

பூக்களின் தலைவி !
பொன்கதிர்க் காதலி !
தூக்கிய பந்தம்
தோடணி தாமரை !

## 54. ஈச்சமரம்

இற்றுவிழா இலைகள் !
இனிப்புதரும் கனிகள் !
முற்றல்வடு முதலை
முதுகுமரம் ஈந்தாம் !

## 55. நெல்லிக்கனி

சிற்றுரு நெல்லி
அற்றைநாள் ஆப்பிள் !
கற்றவள் ஔவை
கதையின் பாத்திரம் !

## 56. முந்திரி

கருப்பைக் குழந்தை !
காம்பே கனியாம் !
பருப்புத் தங்கம்
பணப்பயிர் முந்திரி !

## 57. மாதுளை

கொம்பில் தொங்கும்
கொற்கைச் சிலம்பு !
செம்புக் கலசம்
செம்மா துளையே !

## 58. தேக்கு

மென்மை உறுதி,
மேனி, நல்லெழில்
என்றும் கரையான்
அண்டா தேக்கு !




## 59. தொலைக்காட்சி

உவகையுள் ளடக்கிய
ஒலி, ஒளிப் பேழை !
நலமுற அறிவியல்
நல்கிய பரிசாம் !

## 60. மணிப்பொறி

இதயத் துடிப்பென
இயங்கும், கரங்களில்
இதமாய் எழிலாய்
இடம்பெறும் மணிப்பொறி !

## 61. ஆயுதம்

அழிக்கும் ஆயுத
அறிவியல் சாதனை
பழிக்கும் கஞ்சாப்
பயிர்வே ளாண்மை !

## 62. வெடிகுண்டு

எரிமலை முட்டை
இடியொலி குண்டு !
பரிவிலார்க் கருவி
பழிவழி காட்டி !

## 63. தொலைபேசி

உறங்கிக் கிடக்கும்
ஒலிதர விழிக்கும்
திறமைக் குறைவால்
தீங்கும் செய்யும் !

## 64. கணணி

இயந்திர மூளை
இனிததன் வேலை !
பயனுள இதன்திறன்
பலதுறை ஆட்சி !

## 65. தொடர்வண்டி

தீண்டாமை ஒழிப்பில்
தேயத்தின் இணைப்பில்
நீண்டபணி முடித்தது
நீராவி வண்டியே !

## 66. அச்சகம்

காக்ஸ்டன் கண்ட
கல்விக் கருவி !
ஊக்கும் நூல்கள்
உருப்பெரும் அச்சகம் !

## 67. மிதிவண்டி

காற்றைக் குடித்துக்
கடுகி உருளும்!
மாற்றாம் நடைக்கு
மகிழ்மிதி வண்டி!

## 68. எக்ஸ்ரே கதிர்

உள்மனக் கருத்தை
உணர்பெரி யோர்போல்,
எள்நிறப் படத்தால்
எக்ஸ்கதிர் விளம்பும்!




## 69. வேழம்

நடக்கும் குன்று !
நவீன டாங்க்கு !
அடங்கும் விலங்கு !
ஆற்றல் வேழம் !

## 70. அரிமா

பிடரெழில், உடல்வலி,
பெருமுழக் கதனால்,
அடவியின் அரசாம்
ஆண்மை அரிமா !

## 71. குக்கல் (நாய்)

இனத்தைப் பகைக்கும்
இட்டால் நினைக்கும்
கனத்தவர் வீட்டில்
கட்டாய மிருக்கும் !

## 72. பரி (குதிரை)

மூங்கில் கால்கள்
முயல்நேர் ஓட்டம்
தூங்கவும் படுக்காத்
துடிப்புடைப் பரிகள் !

## 73. பூனை

பூநாகப் பாதம்
புலிப்போலி பூனை !
தீநாக்குப் பாம்பைத்
தீரமாய் எதிர்க்கும்.

## 74. அணில்

மின்னல் பாய்ச்சல்!
மேனியில் நாமம்!
உன்னும் நிலையில்
'ஓ'வெழுத் தணிலே!

## 75. பசு

நடிப்பால், பசப்பால்,
நமைச்சுரண் டாமல்
மடிப்பால் கொடுக்கும்
மதிப்பால் பசுமேல்!

## 76 . மஞ்ஞை (மயில்)

ஒட்டகக் கழுத்து,
ஒயில்நடை, கொண்டை,
பட்டிதழ்த் தோகைப்
பறவை இந்திரன்.

## 77. ஆந்தை

அல்லை ஆளும்
ஆந்தை எலியைக்
கொல்லும் 'ற'கரக்
கோலப் பறவை!

## 78. சிலந்தி

நொச்சிக் கால்களால்,
நூலிழை எச்சிலால்,
குச்சில் கண்ணியைக்
கோலிடும் சிலந்தி!

## 79. தேனீ

மடியைப் பகைக்கும்
மலர்ந்தேன் நயக்கும்
கடிதாய் உழைக்கும்
கலைத்தே னீக்கள்!




## 80. வெற்றி

தெளிந்த திட்டம்
தீவிர உழைப்பு
பளிங்காம் எண்ணம்
பழியிலா வெற்றி !

## 81. புகழ்

வெற்றி, ஈகை
விழுமிய தொண்டு,
முற்றிய அறிவு:
முனைப்பும் புகழாம்.

## 82. இசை

எதற்கும் இரங்கா
இறுகிய மனதிலும்
இதமாய் நுழைந்து
ஈர்ப்பதே இசையாம் !

## 83. ஆற்றல்

பொய்மை புனைவொடு
பொதுவலம் வருகையில்
மெய்மை மிடுக்கிழந்து
மெலிந்தோரம் நிற்கிறதே !

## 84. நேர்மை

இளைத்துச் சலித்தே
இருமிக் கிடப்பினும்
வளைக்குள் எலியல
வரிப்புலி நேர்மையே !

## 85. நம்பிக்கை

இயலும் என்பதும்
எம்மவ ரென்பதும்
முயலும் வினையின்
'முதல்'நம் பிக்கை !

## 86. நூலகம்

எத்துறை அறிவும்
இருப்புள நூலகம்
புத்தகத் தாமரை
பூத்திடும் பொய்கை !

## 87. நடுவுநிலை

மணப்பவர் மரித்தவர்
எவர்கழுத் திடினும்
குணநலன் குறைந்திடாக்
குளிர்மலர் மாலைகள்.

## 88. பண்பறிவு

பண்பை இழந்தது
பகுத்தறி வாயினும்
உண்மை நலனுக்(கு)
ஊறாய் முடியும்.

## 89. அகவிழி

இதயத் துள்ளே
இருப்பதைக் காண
உதவும் விழியிலை
உலகம் பிழைத்தது !

## 90. மனச்சாட்சி

உள்மன உணர்வுகள்
உறுத்தும் உண்மை !
தெள்ளிய நெறியின்
தீர்ப்பின் உயிர்ப்பு !

## *91. தங்கம்*

மங்கல உலோகம்
மணக்கொடை பேரம்
தங்க அணியிடம்
மங்கையர் மோகம்!

## *92. நிலக்கரி*

அழிவின் ஆக்கம்
அரிய எரிபொருள்
தொழில்வள முயற்சித்
துணைக்கருந் தங்கம்!

## *93. திலகம்*

நெற்றி நிலவு!
நித்திலச் சுவடு!
உற்றவன் வாழ்வதாய்
உரைப்பது திலகம்!

## 94. மஞ்சள்

மங்கையர் முகத்தின்
மங்கல முத்திரை !
மங்கா மருந்திது !
மலிவுத் தங்கம் !

## 95. விளையாட்டு

உள்ளத் துணர்வுகள்
உசுப்ப வெளிப்படும்
வெள்ளச் சக்தியே
விளையாட் டாகும் !

## 96. வதந்தி

நம்பும் படியாய்
நடவாச் செய்தியை
வம்பர் பரப்பும்
வாயுரை வதந்தி !

## 97. கீழ்மை

ஆதாய அரசியல்
ஆணவப் பேச்சு
சூதான முயற்சி
சுரண்டல் கீழ்மை !

## 98. சாலை

மக்கள் வாக்கால்
மாண்பா னோர்வர
பொக்கைச் சாலை
பூசிக் குளிக்கும் !

## 99. பெருமை ?

புலி,கிளி பொதுவில்
புரிநலன் ஒன்றிலை !
எலிவால் மண்புழு
ஏர்பணி செய்யுதே !

## *100.* பொன்னான வாக்கு

பொன்னான வாக்குதனைப்
போடென்றார், போட்டதெலாம்
அன்னாரின் இல்லத்தில்
அணிமணியாய் ஆனதென்னே !

## *101.* உயரமானது

தன்னலம் மறக்கும்
தம்மவர் புரக்கும்
அன்னையின் உளமே
அனைத்திலும் உயரம் !

